## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

## அ.வ.எண்.303/2017

2019 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.த.சா.2-ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு.க.சுரேஷ் குமார் உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | முத்துச்சாமி | தொழில் | - | |
| த.க.பெ. | - | குமாரசாமி | ஊர் | - | |
| வயது | - | | தாலுக்கா | - | |
| மதம் | - | | மாவட்டம் | - | |

10.12.2019

**முதல் விசாரணை.**

நான் வழக்கில் மூன்றாம் நபர். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன்.

**3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சொந்த ஊர் கச்சேரிவலசு. 3 ம் பிரதிவாதி சரஸ்வதியின் காலஞ்சென்ற கணவர் பழனிச்சாமியின் சொந்த ஊரும் கச்சேரிவலசு. எனக்கு பழனிச்சாமி மாமன் மச்சான் உறவு . பழனிச்சாமி காலமாகிவிட்டார். அவருடைய மனைவி சரஸ்வதி தற்காலம் சரியான புத்தி சுவாதீனம் சரியில்லாமல் உள்ளார். சரஸ்வதி அவருடைய அண்ணன் மனைவி கனகாம்பரத்தின் பராமரிப்பில் உள்ளார் என்றால் சரிதான். பழனிச்சாமிக்கும் சரஸ்வதிக்கும் திருமணம் நடந்தது தெரியும். மேற்படி இருவரின் திருமணமும் இந்து குல வழக்கப்படி அக்னி சாட்சியாக தாலி கட்டி நடந்த திருமணம் ஆகும். பழனிச்சாமிக்கும் சரஸ்வதிக்கும் குழந்தைகள் எதுவும் இல்லை. பழனிச்சாமி பின்னிட்டு வாதியின் தாயார் நல்லமுத்துவை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி திருமணம் ஈரோடு அருகே உள்ள ஊத்துக்குளி நட்டாதீஸ்வரன் கோவிலில் நடந்தது. பழனிச்சாமிக்கும் நல்லமுத்துவுக்கும் பிறந்த மகன் வாதி சாமிநாதன் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகள் ஒரே ஊர்க்காரர் மற்றும் உறவினர் என்பதால் எனக்கு நேரடியாகத் தெரியும். 4 ம் பிரதிவாதி வரதராஜ் தகப்பனார் பெயர் ரங்கசாமிநாயக்கர் ஆகும். 4 ம் பிரதிவாதியின் தாயார் பெயர் விஜயா ஆகும். மேற்படி விஜயா பழனிச்சாமி நடந்தி வந்த செங்கல்சூளையில் வேலைக்கு இருந்த நபர் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.